# ஆண்டவரின் திருக்காட்சி பெருவிழா

## திருப்பலி முன்னுரை

“விண்மீனைக் கண்டதால் அவர்கள் தங்கள் பயணத்தைத் தொடங்கவில்லை. மாறாக, அவர்கள் ஏற்கெனவே இறைவனை நோக்கித் தங்கள் பயணத்தைத் தொடங்கியிருந்ததால், அவர்கள் விண்மீனைக் கண்டார்கள். ஆண்டவரின் திருமுகத்தைப் பார்த்து தரிசிக்கும் பேற்றைப் பெற்றார்கள்.” என்று கூறும் புனித ஜான் கிறிஸ்சோஸ்தம் சிந்தனையோடு இன்றைய பெருவிழாத் திருப்பலிக்கு அன்போடு வரவேற்கின்றோம்.

மனிதர்களின் உள்ளத்தின் ஆழத்தில் கடவுள் தேடல் பதிந்துள்ளது. எனவேதான் தொடக்க காலத்திலிருந்து மனிதர் கடவுளைத் தேடி வந்துள்ளனர். இன்றைய திருக்காட்சிப் பெருவிழா இதற்குச் சிறந்த சான்று. மூன்று அரசர்கள் குழந்தை இயேசுவைத் தேடி வருகிறார்கள். இறைத் தேடல் உள்ள உள்ளம் நற்சிந்தனைகளால் மட்டுமே நிறைந்திருக்கும் என்பதற்கேற்ப கடவுளும் அவர்களுக்கு உதவிபுரிந்தார்; வழிகாட்டினார். ஆனால் நற்சிந்தனையற்ற தேடல் உள்ளம் இல்லாத உள்ளம் கொண்ட ஏரோது கலக்கமுற்றார், துயரமடைந்தார். தேடல் கொண்ட உள்ளம் இறைவனின் துணைகொண்டு அவரையே கண்டு மகிழும். மனிதன் கடவுளாகவும், கடவுள் மனிதனாகவும் நம் முன்னே காட்சி தரும் இந்நாளில் இறை மனித சந்திப்பும், இறை மனித உறவும் தினம் வளர வேண்டி பக்தியோடு இத்திருப்பலியில் பங்கேற்போம்.

## முதல் வாசக முன்னுரை

“ஆண்டவரின் மாட்சி உன்மேல் உதித்துள்ளது. ஆண்டவரோ உன்மீது எழுந்தருள்வார். பிற இனத்தார் உன் ஒளி நோக்கி வருவர்” என்று எடுத்துரைத்து, மெசியாவின் வருகையானது எல்லா இனத்தாரையும் ஒன்று கூட்டிச் சேர்ப்பதாக இருக்கும் என்பதைத் தெளிவுபடுத்தும் இறைவாக்கினர் எசாயா நூலின் வார்த்தைளுக்குச் செவிமடுப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

இன்றைய இரண்டாம் வாசகத்தில் புனித பவுல் அடிகள் இயேசு என்னும் மறைபொருள், தூய ஆவியார் வழியாக அனைவருக்கும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, பிற இனத்தார் அனைவருக்கும் இம்மறைபொருள் அளிக்கப்பட்டுள்ளது என்றும் நாமும் நம்பிக்கையோடு இயேசு என்னும் மறைபொருள் தூய ஆவியார் வழியாக நம் வாழ்வில் கலந்திட அருள் வேண்டி திருத்தூதர் பவுல் எபேசியருக்கு எழுதிய திருமுகத்தின் வார்த்தைகளுக்குச் செவிசாய்ப்போம்.

## மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. அருளின் ஊற்றே இறைவா! இயேசுவின் பிறப்பு படைப்பனைத்திற்கும் மகிழ்ச்சியைக் கொண்டு வந்தது போல, எம் திருஅவை உறுப்பினர்களும் எப்போதும் மகிழ்ச்சியை, நிறைந்த அமைதியைத் தரும் கருவிகளாகச் செயல்பட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அருட்பெருஞ்சுட்ரே எம் இறைவா! உம்மை ஆவலாய் தேடி, கண்டுக் கொண்ட ஞானிகளின் மன உறுதியைப் போல, நாங்களும் உம்மை ஆவலாய் தேடவும், எங்கள் அயலவரில் உம் முகம் கன்டு மகிழவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. ஞானத்தின் ஊற்றே எம் இறைவா! உலகில் உள்ள எல்லா குழந்தைகளையும் ஆசிர்வதியும். உம்மைப் போன்று ஞானத்தில் வளரவும், கல்வி, கேள்விகளில் சிறக்கவும், பெந்நோருக்கு உகந்த பிள்ளைகளாய் வாழ்ந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அமைதியின் ஊற்றே இறைவா! எம் பங்கில் உள்ள எல்லா குடும்பங்களையும் ஆசிர்வதியும். குடும்பத்தில் அமைதியும், தொழிலில் முன்னேற்றமும், நோயுற்றோர் நலம் பெற வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நன்றி : அருட்சகோதரி ஷீலா FST, மேலமெஞ்ஞானபுரம்.**

“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com